செ.வெ.எண்: 743/2016 நாள்: 21.10.2016

# செய்தி குறிப்பு

2016–2017ம் நிதியாண்டில் தாட்கோ மூலம் இந்து ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

1. மகளிர் நிலம் வாங்கும் திட்டம் (பெண்களுக்கானது)
2. நில மேம்படுத்துதல் திட்டம் (இருபாலருக்கும்)
3. தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்
4. இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு திட்டம்
5. மருத்துவ மையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் மற்றும் மேம்படுத்துதல்
6. பெட்ரோல் / டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம்
7. மகளிர், மற்றும் (ஆண்,பெண் கலந்த) சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி
8. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி
9. மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி திட்டம்
10. இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வில் (Preliminary) வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி.
11. தமிழ்நாடு தேர்வாணயத் தொகுதி–1 (TNPSC-Group-I) முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி.

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்புவோர் **http://application.tahdco.com** என்ற இணையதள முகவரிக்கு சென்று ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது புகைப்படம், சாதி சான்றிதழ், குடும்ப அட்டை, வருமான சான்றிதழ், திட்டத்திற்கான விலைப்புள்ளி (TIN No), திட்ட அறிக்கை, கல்வி மாற்று சான்றிதழ், போன்ற விவரங்களுடன் மேற்குறிப்பிட்ட இணையதளத்திற்கு சென்று விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் இந்து ஆதிதிராவிடர்களாக இருக்கவேண்டும். வயது வரம்பு 18 முதல் 65 வரை (இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு வயது வரம்பு 18 முதல் 45 வரை) விண்ணப்பிப்போரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்குள் இருக்கவேண்டும். சிறப்புத்திட்டமான பெட்ரோல்/டீசல் / கேஸ் சில்லரை விற்பனை நிலையம் மற்றும் மருத்துவமனை அமைக்கும் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ஏதும் இல்லை. நிலம் வாங்கும் திட்டத்திற்கு மூலபத்திரம், விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா அடங்கல், நில பத்திரம் மற்றும் நிலம் விற்பனை செய்பவரின் சாதி சான்றிதழ், விவரங்களை பதிவு செய்து ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்கள், மாவட்ட மேலாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், 3வது தளம், நாகர்கோவில் முகவரியில் அலுவலக நாட்களில் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்க வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது, மேலும் விபரங்களுக்கு 04652–227532 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒம்/21.10.2016.
மாவட்ட ஆட்சித் தலைவ ர்.
கன்னியாகுமரி மாவட்டம்.

//உ.ந.உ.ப//

உதவி மேலாளர்,
தாட்கோ, நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.